
# ஜாலான் புடு இயூ வட்டாரத்தில் மேம்பால சாலையை விரிவுபடுத்தாதீர்

கோலாலம்பூர், அக். 29-

கோலாலம்பூரின் மையப்பகுதிகளில் ஒன்றான ஜாலான் இயூ உள்ளடங்கியுள்ள புடு வட்டாரத்தில் ஒரு மேம்பால சாலையை விரிவுப்படுத்தும் திட்டத்தை மாநகர மன்றம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டது.



எப்போதுமே போக்குவரத்து நெரிசலை தீர்க்க ஒரு மேம்பால சாலையை விரிவுபடுத்துவது சரியான தீர்வாக அமையாது.

இது எதிர் காலத்தில் இன்னும் பல விளைவுகளுக்கு காரணமாகிவிடும். சாலையை விரிவுப்படுத்துவது எப்போதும் போக்குவரத்து நெரிசலை தீர்த்து விடாது. அது ஒரு குறுகிய திட்டமாகவே அமையும்.

ஒரு சாலையை விரிவுப் படுத்தும் போது இன்னும் அதிகமானோர் அதை பயன்படுத்துவார்கள். அதன் மூலம் போக்குவரத்து நெரிசல் அதிகமாகுமே தவிர குறையாது. புடு வழியாக செல்லும் அந்த மேம்பாலச் சாலை நகரின் தென் பகுதி யான கிள்ளான் பள்ளத்தாக்கில் பல இடங்களையும் சிரம்பான் வரை கூட வாகனங்கள் செல்ல ஏற்படுத்தப்பட்டது.

ஏற்கெனவே அந்த பாலம் குறிப்பாக ஜாலான் யூவில் மிகவும் ஒரு நெருக்கடியான போக்குவரத்து சூழலை ஏற்படுத்தியிருக்கிறது. அங்கு மேம்பால சாலையை விரிவுப்படுத்தி அதிகமான சாலையை அனுமதித்தால் அதனால் எழும் ஒலி அளவும் காற்று தூய்மைக்கேடும் அருகில் உள்ள மக்களையும் வணிகர்களையும் பாதிக்கும்.

குறிப்பாக அந்த மேம்பால சாலையை விரிவுப்படுத்தும் போது அது அங்குள்ள கட்டடங்களுக்கு மிக அருகில் செல்லக் கூடிய நிலை வரும்.

அது அங்கிருக்கின்ற மக்களுக்கு குறிப்பாக வணிகர் களுக்கு பெரும் பாதிப்பாக அமையும். வாடிக்கையாளர்கள் அங்கு செல்வதை குறைத்து கொள்வார்கள்.

எனவே மாநகர மேயர் மைமுனா ஷாரிட் தமது நகரத் திட்ட அமைப்பின் ஆழ்ந்த அறிவாற்றலையும் அனுபவத்தையும் வைத்து இதை சீர்தூக்கி பார்க்க வேண்டும் என ஒரு கடிதம் வாயிலாக அவருக்கு வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இது கடந்த கால ஒரு முடிவாக இருந்தாலும் இப்போதைய நிலைக்கு இது ஏற்புடையதா என்பதை யோசிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

சாலைகளை விரிவுப்படுத்து வதை விட எம்ஆர்டி, கேடிஎம் சேவைகளை தெற்கு நோக்கி இன்னும் விரிவுப்படுத்த இந்த நிதி ஒதுக்கீடுகளை அதை நோக்கி திருப்ப வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.